<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2025–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24–ம் நாள் திங்கள்கிழமை.

<u>இடைநிலை மனு எண்.3/2024</u>

<u>இன்</u>

<u>அசல் வழக்கு எண்.192/2019</u>

முருகேசன் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ராமலிங்கம்
2. பட்டம்மாள் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 01.02.025–ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. வாசுதேவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. ஏருதாஸ்பால் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது 04.12.2020–ல் வாதியின் தவறுதலுக்காக தள்ளுபடியாகியுள்ள வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 9 விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர் அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொருத்து பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், அசல் வழக்கு 04.12.2020 ல் மனுதாரரின் தவறுதலுக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், தள்ளுபடியான நேரம் கொரானா காலம் என்பதால் 2021 மார்ச் வரை தனக்கு உடல்நிலை சரியில்லை என்றும், பின்னிட்டு தனது வழக்கறிஞரை சென்று பார்த்தபோது அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள் என்றும், யாரிடம் தன் கேஸ் கட்டை கொடுத்தார் என்ற விவரம் கூட தனக்கு தெரியாது என்றும், பின்னர் பல வழிகளில்

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.24 19:06:06 +0530

தேடி தற்போதைய வழக்கறிஞர் வாசுதேவன் என்பவரிடம் கொடுத்து 21.09.2022 ம் தேதி கொடுத்து என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்டபோது மேற்கண்ட வழக்கு தள்ளுபடியான விவரத்தினை கூறினார் என்றும், பின்னிட்டு மேற்படி வழக்கறிஞரிடம் வக்காலத்து தாக்கல் செய்து, மேற்படி தன் வழக்கை ரெஸ்டோர் செய்து மனுவினை ஏற்றுக்கொள்ள வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 1 ம் <u>எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:-</u>

மனுவில் கண்டுள்ள சங்கதிகளை மறுத்தும், வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைபட்டவர் என்றும், மனுதாரர்/ வாதியின் தவறுகைக்காக கடந்த 14.07.2015 ம் தேதி தள்ளுபடியாகியுள்ளது என்றும், மேற்படி தள்ளுபடியான அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி தாக்கல் செய்த IA No. 2329/2017 Restore மனுவை கடந்த 24.03.2016 ம் தேதி தாக்கல் செய்து 26.10.2017 மதேதி நம்பராகி வாய்தா போடப்பட்டதுஎன்றும், மீண்டும் மனு தவறுகைக்காக 04.12.2020 ம் தேதி தள்ளுபடியாகிவிட்டது என்றும், உண்மையில் மனுதாரர்/வாதிக்கு எந்தவொரு உடல்நல குறைவும் ஏற்படவில்லை என்றும், மேற்படி நம்பர் வழக்கின் விபரம் பற்றி நீதிமன்றத்திற்கு வந்து தவறாமல் மனுதாரர்/ வாதி தெரிந்து கொள்ளும் வழக்கத்தையுடையவர் என்றும், 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதியை மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளார் என்றும், மனு சட்டபடி நிலைக்கதக்கதல்ல என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென எதிர்பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,

‘‘ மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

<u>6. தீர்வு</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலித்த வகையில் அசல் வழக்கானது மனுதாரரால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் வேண்டி 29.03.2011 அன்று அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. பின்னிட்டு அசல் வழக்கில 3 ம்

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.24 19:06:10 +0530

தரப்பினரை சேர்க்க எவ்வித முன் எடுப்பும் மனுதாரர்/வாதியின் தரப்பில் எடுக்காத காரணத்தால் 14.07.2015 ம் தேதி தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது பின்னிட்டு மனுதாரர்/வாதி தரப்பில் IA No. 2329/2017 தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் 06.07.2019 ம் தேதி அசல் வழக்கு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அது முதல் 04.12.2020 ம் தேதி வரை மேற்படி 3 ம் தரப்பினராக அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க முன்னெடுப்பு செய்து வாய்தா அளிக்கப்பட்டும் மனுதாரர் தரப்பில் எவ்வித முன்னெடுப்பும் எடுக்கா காரணத்தால் அசல் வழக்கானது 04.12.2020 ம் தேதி மீண்டும் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

இந்நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை ஆராய்கையில் மனுவில் காரணமாக கொரானா காலம் என்பதால் 2021 மார்ச் வரை தனக்கு உடல்நிலை சரியில்லை என்றும், பின்னிட்டு தனது வழக்கறிஞரை சென்று பார்த்தபோது அவர் இறந்துவிட்டதாக தெரியவந்தது என்றும், யாரிடம் தன் கேஸ் கட்டை கொடுத்தார் என்ற விவரம் கூட தனக்கு தெரியாது என்றும், பின்னர் பல வழிகளில் தேடி தற்போதைய வழக்கறிஞர் வாசுதேவன் என்பவரிடம் கொடுத்து 21.09.2022 ம் தேதி கொடுத்து என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்டபோது மேற்கண்ட வழக்கு தள்ளுபடியான விவரத்தினை கூறினார் என்றும், எனவேதான் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், கூறியுள்ளதை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்/வாதிக்கு எந்தவொரு உடல்நல குறைவும் ஏற்படவில்லை என்றும், 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதியை மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாக்கவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளதை ஆராய்கையில், மனுதாரர் வாதியாக உள்ள நிலையிலும் அவரது வழக்கை நிரூபிக்க அவருக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலன் பொருட்டு உகந்தது என்று கருதியும், ஏற்கனவே இம்மனுதாரரால் காலவரையறை பிரிவு 5 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு எண்.2/2023 ஆனது அனுமதிக்கப்பட்டுள்ள நிலையிலும் இம்மனுவை ஆட்சேபித்து எதிர்மனுதாரர் தரப்பில் தகுந்த காரணம் கூறப்படாத நிலையிலும் மேற்கண்ட காரணங்களுக்காக மேற்படி மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.24 19:06:14 +0530

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.24 19:06:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.02.24 19:06:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.